Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.1**

| Name: | ராஜி | Calling: | ஓட்டுநர் |
|---|---|---|---|
| Father's Name: | முனுசாமி | Religion: | இந்து |
| Village: | வளையாம்பட்டு | Age: | 39 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 25.06.2024

SIGN :

(எதிரி ஆஜர்.)

அ.சா. 1 முதன்மை விசாரணை

விபத்தில் இறப்புற்ற விஜய், சூரியா எனது மகன்கள், ரபீக் எனது மகன்களின் நண்பர் ஆவார். 28.02.2023 ம் தேதி 08.45 மணியளவில் வளையாம்பட்டிலிருந்து கிரிசமுத்திரத்திலுள்ள பள்ளிக்கு எனது மகன்கள் ஒரு சைக்கிளிலும், ரபீக் மற்றொரு சைக்கிளிலும் சென்றபோது கிரிசமுத்திரம் சாமி அண்ட் கோ அருகே விபத்து ஏற்பட்டது. சிவப்பு நிற மகேந்திரா கார் மோதி விபத்து ஏற்பட்டதாக ராஜா என்பவர் தொலைபேசி வாயிலாக எனக்கு தகவல் சொன்னார். தகவல் தெரிந்து சுமார் 20 நிமிடத்திற்குள் சம்பவ இடத்திற்க சென்றேன். அங்கு சென்றபோது எனது 2 வது மகனுக்கு தலையில் அடிப்பட்டடிருந்தது. எனது மற்றொரு மகனுக்கு இடது கால், முகம் ஆகிய இடங்களில் அடிப்பட்டிருந்தது. ரபிக் என்ற சிறுவனுக்கு தோள்பட்டை, தலையில் காயம் ஏற்பட்டிருந்தது.

சம்பவ இடத்திலேயே மூவரும் இறந்து இருந்தார்கள். அவர்களது

உடல்களை ஆம்புலன்ஸ் மூலமாக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றேன். கார் இடித்து எனது பிள்ளைகள் இறந்து விட்டதாக அங்கிருந்தவர்கள் கூறினார்கள். இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க கோரி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. **அந்த புகார்மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது இரு மகன்களின் பிரேதத்தின் மீதும் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். நானும் சாட்சியாக உடனிருந்தேன். என்னையும் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் முதல் விசாரணையில் கூறிய விவரத்தை தான் போலிசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். வளையாம்பட்டு பகுதியிலிருந்து கிரிசமுத்திரம் அரசு உயர்நிலைபள்ளிக்கு செல்ல லாலா ஏரி வழியாக மற்றொரு வழி உள்ளது என்றால் சரிதான். லாலா ஏரி வழியாக சென்றால் விரைவில் பள்ளிக்கு சென்றுவிடலாம் என்றால் சரியல்ல, விபத்து சமயத்தில் அவ்வாறு ஒரு வழியே இல்லை. பள்ளிக்கு ஒன்பது மணிக்கு செல்ல வேண்டும் என்பதற்காக 08.45 மணிக்கு புறப்பட்டு அவசர அவசரமாக சென்றார்கள் என்றால் சரியல்ல. விபத்து யாருடைய தவறினால், எந்த தவறினால் ஏற்பட்டது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த காரை யார் ஓட்டி வந்தார், அதில் எத்தனை நபர்கள் பயணித்தார்கள் என்பதை குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ராஜி

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./-) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.2**

| Name: | ராஜா | Calling: | ஓட்டுநர் |
|---|---|---|---|
| Father's Name: | கமலநாதன் | Religion: | இந்து |
| Village: | வளையாம்பட்டு | Age: | 41 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 25.06.2024

SIGN :

(எதிரி ஆஜர்.)

அ.சா. 2 முதன்மை விசாரணை

28.02.2023ம் தேதி 08.45 மணியளவில் வேலூரிலிருந்து வாணியம்பாடி நோக்கி வந்த கர்நாடகா பதிவெண் கொண்ட வாகனம் 03 ஏஎப் 0194 என்ற மகேந்திரா வேன் பைபாஸ் சாலையில் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து தடுப்பு சுவரை தாண்டி வலது பக்க சர்வீஸ் சாலையில் வந்து கொண்டிருந்த சூரியா, விஜய், ரபீக் ஆகியோர் மீது சாமி அண்ட் கோ தொழிற்சாலை அருகே மோதியதில் மூன்று நபர்களும் தூக்கி வீசப்பட்டு கை, கால், முகங்களில் காயங்கள் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். இறப்புற்ற சூரியா, விஜயின் தந்தையான ராஜிக்கு மட்டும் தகவல் கூறினேன். வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்திற்கும் தகவல் கூறினேன். விபத்தை ஏற்படுத்திய காரை யார் ஓட்டி வந்தார்கள் என்பதை நான் பதட்டத்தில் கவனிக்கவில்லை. குழந்தைகளின் சடலத்தை வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்று பிரேத பரிசோதனைக்கு பின்பு

ஒப்படைக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் ஆட்டோ ஓட்டுநராக உள்ளேன். பொதுவாக தேசிய நெடுஞ்சாலையில் ஒரு வாகனம் எவ்வளவு வேகத்தில் வர வேண்டும் என்றால் 80 கி.மீ வேகத்தில் வரலாம். வாகனம் அதிவேகமாக வந்தது என்பதனை எதை வைத்து கூறுகிறேன் என்றால் வாகனம் தடுப்பு சுவரை மீறி சர்வீஸ் சாலைக்கு சென்று விபத்தை ஏற்படுத்தியதால் வாகனம் வேகமாக வந்தது என கூறினேன். ஒரு வேளை ஸ்டேரிங் லாக் ஆனால் தடுப்புச்சுவர் மீது மோத வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என தெரியுமா என்றால் தெரியாது. எந்த அடிப்படையில் விபத்து ஏற்பட்டது என தெரியாது என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வாகனத்தில் எத்தனை நபர்கள் பயணித்தார்கள் என்றால் 2 ஆண் நபர்கள் பயணித்திருந்தார்கள் வழக்கு விவரங்கள் போலிசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் தான் தெரியும் என்றால் சரியல்ல. ராஜி எனது ஊரை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ராஜா

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.